

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 318 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 15 – திங்கள்கிழமை 29 ஜூன் 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 318 : Thiruvalluvar Year - 2057 - Aani 15 - Monday 29 June 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00

## அனைவரையும் ஈர்த்த யதார்த்த நாயகன்!

# இந்திய சினிமாவில் முடிசூடா திரைக்கதை மன்னர் பாக்யராஜ்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!



மறைந்த – பிரபல தமிழ்த் திரைப்பட இயக்குநரும், நடிகருமான கே.பாக்யராஜ் அவர்களின் திருவுடலுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., தலைமைக் கழக முதன்மைச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு எம்.எல்.ஏ., கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. ஆகியோர் உடன் சென்றனர்.

**சென்னை, ஜூன் 29 -**

**“இந்திய சினிமாவில் முடிசூடாத் திரைக்கதை மன்னராக விளங்கியவர் பாக்யராஜ் அவர்கள்” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் புகழாரம் சூட்டியுள்ளார்.**

பிரபல நடிகரும் இயக்குநருமான கே.பாக்யராஜ் மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது 73. தமிழ் சினிமாவில் தனது தனித்துவ திரைக்கதை பாணியால் வெகுவாக ஈர்த்தவரும், நகைச்சுவையுடன் கூடிய நடிப்பாற்றலால் ரசிகர்களை மகிழ்வித்தவருமான பாக்யராஜின் இழப்பால் தமிழ்த் திரையுலகம் சோகத்தில் ஆழ்ந்துள்ளது. பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சினிமா துறை மீது கொண்ட ஆர்வம் காரணமாக இயக்குநர்கள் ஜி.ராமகிருஷ்ணன் மற்றும் பாரதிராஜா ஆகியோரின் உதவி இயக்குநராக அவர் பணியாற்றினார். கடந்த 1977ல் தனது திரைப் பயணத்தை அவர் தொடங்கினார்.

இதில் பாரதிராஜாவுடன் ‘16 வயதினிலே’, ‘கிழக்கே போகும் ரயில்’ உள்ளிட்ட படங்களில் உதவி இயக்குநராக பணியாற்றினார். கிழக்கே போகும் ரயில் மற்றும் டிக் டிக் டிக் படங்களுக்கு பாரதிராஜாவுடன் இணைந்து கதை எழுதினார். சிகப்பு ரோஜாக்கள் படத்துக்கு வசனம் எழுதியவர், துணை கதாபாத்திரங்களிலும் அவர் நடித்து வந்தார்.

சுவர் இல்லாத சித்திரங்கள் படம் மூலம் இயக்குநராக அறிமுகமானார். தொடர்ந்து பல்வேறு படங்களை இயக்கிய அவர், தனது படங்களில் கதாநாயகனாகவும் நடித்துள்ளார். இன்று போய் நாளை வா, அந்த 7 நாட்கள், தூறல் நின்னுபோச்சு, டார்லிங் டார்லிங், முந்தானை முடிச்சு, தாவணிக் கனவுகள், சின்ன வீடு, அவசர போலீஸ் 100, ராசுக்குட்டி, ஒரு ஊர்ல ஒரு ராஜகுமாரி, சொக்கத்தங்கம், சித்து +2 உள்ளிட்ட படங்களை இயக்கி நடித்துள்ளார். இதோடு திரைப்படத்துக்கு பின்னணி இசை அமைத்து, பாடலும் பாடி உள்ளார். ‘பாக்யா’ என்று வார இதழின் ஆசிரியராக இயங்கி வந்தார்.



‘திரைக்கதை மன்னன்’ என்று போற்றப்படும் பாக்யராஜின் படங்கள் ஜனரஞ்சகமாக இருக்கும். கதை, வசனங்கள், காமெடி என அவரது படங்கள் கவனம் ஈர்க்கும். சிறந்த திரைக்கதை ஆசிரியராக அறியப்பட்டவர்.

தனது சினிமா பணிக்காக பல்வேறு விருதுகளை பெற்றுள்ளார். தமிழகத்தின் பிரதான அரசியல் கட்சிகளில் இணைந்து அவர் பணியாற்றி உள்ளார். இயக்குநர்கள் பார்த்திபன் மற்றும் பாண்டியராஜன் ஆகியோர் பாக்யராஜின் உதவி இயக்குநர்களாக பணியாற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 10ம் தேதி இயக்குநர் பாரதிராஜா காலமான நிலையில் நேற்று முன்தினம் (ஜூன் 27) இயக்குநர் பாக்யராஜ், மாரடைப்பு காரணமாக காலமானது திரையுலகை பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

அவரது மறைவு குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

**ஆசான் மறைந்த சில வாரங்களிலேயே அவரது மாணவரையும் இழந்துவிட்டது தமிழ்த் திரையுலகம்!**

**இந்திய சினிமாவில் முடிசூடாத் திரைக்கதை மன்னராக, அனைவரையும் ஈர்த்த யதார்த்த நாயகனாக, சிக்கலான சூழலையும் சிறிய வசனத்தில் கடத்திவிடும் ஆற்றல் பெற்ற எழுத்தாளராக என எல்லாவற்றிலும் வெற்றிபெற்ற அசாத்திய இயக்குநராக வலம் வந்தவர் பாக்யராஜ் அவர்கள்.**

**தன்னைப் போலவே மேலும் பலரை இயக்குநர்களாக வளர்த்தெடுத்த பெருமைக்குரியவர்.**

**சில மாதங்களுக்கு முன்புதான், பாக்யராஜ் அவர்கள் திரையுலகில் 50 ஆண்டுகாலத்தை நிறைவு செய்ததற்கான விழாவில் கலந்து கொண்டு, முதலமைச்சராக மட்டுமின்றி, அவரது இரசிகனாகவும் அந்த விழாவில் பேசியிருந்தேன். அந்த நினைவுகள் இன்னும் பசுமையாக உள்ளன.**

**திரைத்துறையில் இன்னும் பல ஆண்டுகள் பங்களிக்கும் வாய்ப்பையும் ஆற்றலையும் பெற்றிருந்த அவர் தம் வாழ்வை நிறைவு செய்து கொண்டுவிட்டது பெரும் இழப்பு.**

**அவரை இழந்து தவிக்கும் திருமதி. பூர்ணிமா பாக்யராஜ், சாந்தனு, சரண்யா உள்ளிட்ட குடும்பத்தினருக்கும் திரைத்துறை நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்கள்.**

**தமது படைப்புகளால் பாக்யராஜ் அவர்கள் என்றென்றும் தமிழ்நாட்டு மக்களின் பிரிக்க முடியாத அங்கமாகத் தொடர்ந்து வாழ்வார்.**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

---

### ஒன்றிய பா.ஜ.க. அரசின் தூண்டுதலால் S.I.R. மூலம்

## ஒரே ஆண்டில் 6 கோடி வாக்காளர்கள் நீக்கம்!

### தேர்தல் ஆணையம் மீது சமூக ஆர்வலர்கள் குற்றச்சாட்டு!

*புதுடெல்லி, ஜூன் 29 -*

*ஒன்றிய பா.ஜ.க. அரசின் தூண்டுதலின் பேரில், ஒரே ஆண்டில் சுமார் ஆறு கோடி வாக்காளர்களின் பெயர்களை S.I.R. மூலம் தேர்தல் ஆணையம் நீக்கியுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.*

*தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியலை சீரமைப்பதாக கூறி, கடந்த ஆண்டு ஜூன் மாதம் S.I.R. எனப்படும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப் பணியை பீகாரில் தொடங்கியது.*

*தொடர்ந்து, அங்கு சுமார் 65 லட்சம் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டன.*

*பா.ஜ.க. தூண்டுதலின் பேரில், ஆவணங்கள் இல்லாததை காரணத்தை காட்டி, குடிமக்களின் வாக்குரிமையை தேர்தல் ஆணையம் பறிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர்களும் சமூக ஆர்வலர்களும் அப்போது குற்றம் சாட்டினர்.*

*ஆனாலும் தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப் பணியை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.*

*கடந்த ஆண்டு அக்டோபர் 27ம் தேதி அறிவிக்கப்பட்ட இரண்டாம் கட்ட S.I.R பணி மூலம், புதுச்சேரி, அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகள், லட்சத்தீவுகள் ஆகிய யூனியன் பிரதேசங்களிலும், மேற்குவங்கம், உத்தரப்பிரதேசம், தமிழ்நாடு, ராஜஸ்தான், சத்தீஸ்கர், கேரளா, குஜராத், மத்திய பிரதேசம், கோவா ஆகிய மாநிலங்களிலும் வாக்காளர் பட்டியல் 10.2 சதவீதம் குறைக்கப்பட்டது.*

*இந்த மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 50 கோடியே 99 லட்சமாக இருந்தது.*

*S.I.R. பணிக்குப் பின் வாக்காளர்களின் எண்ணிக்கை 45 கோடியே 81லட்சமாக உள்ளது.*

*இதுவரை 5 கோடியே 18 லட்சத்திற்கும் அதிகமான பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.*

*ஒன்றிய பா.ஜ.க. அரசின் தூண்டுதலின் பேரில், ஒரே ஆண்டில் சுமார் ஆறு கோடி வாக்காளர்களின் பெயர்களை S.I.R. மூலம் தேர்தல் ஆணையம் நீக்கியுள்ளது.*

---

### ஜான் ஆரோக்கியசாமி, விஷ்ணுரெட்டி அமைச்சரவைக் கூட்டங்களில் பங்கேற்பு!

## ரகசியக் காப்பு பிரமாணத்தை மீறி விட்டார் முதல்வர்!

### மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. கண்டனம்!

**சென்னை, ஜூன் 29 -**

**“அமைச்சரவைக் கூட்டங்களில் தனது உதவியாளர்கள், ஜான் ஆரோக்கியசாமி, விஷ்ணு ரெட்டி பங்கேற்பது குறித்து தீவிரக் கேள்விகள் எழுந்துள்ளது. இதன் மூலம் முதல்வர் தனது ரகசியக் காப்புப் பிரமாணத்தை மீறி விட்டார்” என்று தலைமைக் கழக சட்ட தலைமை ஆலோசகரும் மூத்த வழக்கறிஞருமான பி.வில்சன் எம்.பி. கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது: -

*முதலமைச்சர் சி.ஜோசப் விஜய் தலைமையில் நடைபெறும் அமைச்சரவைக் கூட்டங்கள், ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் இதர உயர்மட்ட அரசு ஆலோசனைகளில் ஜான் ஆரோக்கியசாமி மற்றும் விஷ்ணு ரெட்டி ஆகியோர் பங்கேற்பது குறித்து தீவிரக் கேள்விகள் எழுந்துள்ளன.*

*ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த ஜான் ஆரோக்கியசாமி மற்றும் விஷ்ணு ரெட்டி ஆகிய இருவரும், தமிழக முதலமைச்சர் சி.ஜோசப் விஜய்யின் நெருங்கிய உதவியாளர்களும் நண்பர்களும் ஆவர். இவர்கள் அரசில் என்ன அதிகாரப் பூர்வப் பதவிகளை வகிக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரியவில்லை; இருப்பினும், தலைமைச் செயலகத்தில் முதலமைச்சரின் அறைக்கு அருகிலேயே அவர்களுக்கு ஓர் அறை ஒதுக்கப்பட்டுள்ளது.*

**எந்தத் தகுதியில் பங்கேற்கின்றனர்?**

*அவர்கள் அரசு ஊழியர்கள் இல்லை என்றால், ரகசிய ஆவணங்கள் பரிமாறப்படும் மிக ரகசியமான கூட்டங்களில் அவர்கள் எந்தத் தகுதியின் அடிப்படையில் கலந்து கொள்கிறார்கள்?*

*முதலமைச்சர் ரகசியக் காப்புப் பிரமாணம் எடுத்துக்கொண்டுள்ளார்.*

*இத்தகைய நபர்களை இதில் ஈடுபடுத்துவது அரசியலமைப்பு நெறிமுறைகள், அலுவல் விதிகள் (Rules of Business) மற்றும் அவரது ரகசியக் காப்புப் பிரமாணம் ஆகியவற்றைப் பின்பற்றுவது குறித்து தீவிரக் கவலைகளை எழுப்புகிறது.*

**அதிகாரப்பூர்வ பதவிகளை பகிரங்கப்படுத்துக!**

*இந்த இரு நபர்களின் அதிகாரப்பூர்வப் பதவிகளை முதலமைச்சர் பகிரங்கப் படுத்தவேண்டும்; அதோடு, எந்த அதிகாரத்தின் கீழ் அவர்கள் அமைச்சரவைக் கூட்டங்களில் கலந்து கொண்டு, அதிகாரிகளுக்கு உத்தரவுகளைப் பிறப்பிக்கிறார்கள் என்பதைப் பொதுமக்களுக்கு விளக்க வேண்டும்!*

*இவ்வாறு பி.வில்சன் எம்.பி. தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.*

---

### டெல்டா பகுதிகளை

## வறட்சி மாவட்டங்களாக அறிவித்திடுக!

### விவசாயிகள் வலியுறுத்தல்!

தஞ்சாவூர், ஜூன் 29 –

மேட்டூர் அணை திறக்கப்படாததால் டெல்டா விவசாயிகளுக்கு ஆயிரம் கோடிக்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதித்த மாவட்டமாக அறிவிக்கவேண்டும் என்றும் விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12ம் தேதி மேட்டூர் அணை குறுவை பாசனத்திற்கு திறக்கப்படும். இந்தாண்டு மேட்டூர் அணை உரிய காலத்தில் திறக்கப்படாததால், டெல்டா மாவட்டங்களில் சுமார் 2 லட்சம் ஏக்கர் குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் மற்றும் 20 லட்சம் விவசாயத் தொழிலாளர்கள் வாழ்வாதாரத்தை இழக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

விவசாயிகளுக்குத் தேவையான தண்ணீரை கர்நாடக அரசிடமிருந்து பெற்றுத் தருமாறும், டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதித்த மாவட்டமாக அறிவித்து, உரிய இழப்பீடை வழங்குமாறும் விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

அணை திறக்கப்படாதது மற்றும் மும்முனை மின்சாரம் வழங்காததால், இந்தாண்டு குறுவை சாகுபடியையே கைவிட்டு விட்டதாகவும், விவசாயிகள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர்.